## 3. IAY

### 3.5 கான்கிரீட் கூரை அமைப்பதற்கான மானியத் தொகையை ரூ.12,000/– ஆக உயர்த்தல்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (ம.அ.தி.3) துறை

**அரசாணை (நிலை) எண். 146** நாள் 11–10–2006

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.181, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16.12.2004.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இ,யக்குநரின் கடித எண்.38370/ஐஏஒய்.1, நாள் 7.8.2006.

**ஆணை**

மேலே படிக்கப்பட்ட ஒன்றில் உள்ள ஆணையில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு கான்கிரீட் கூரை அமைப்பதற்காக மாநில அரசு கூடுதலாக வழங்கும் தொகை ரூ.9,000/– ஆக நிர்ணயித்து 2004–05–ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

2. சட்டமன்றப் பேரவையில் 2006–07–ஆம் ஆண்டிற்கான வரவு – செலவு குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் மானிய கோரிக்கையின் போது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 1998–ஆம் ஆண்டு முதல் கான்கிரீட் கூரை அமைப்பதற்காக 12,000/– ரூபாய் மாநில அரசு வழங்கி வந்ததை 2004 – ஆம் ஆண்டில் 9,000 ரூபாயாக குறைக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு கட்டப்பட இருக்கும் 49,850 வீடுகளுக்கு கான்கிரீட் கூரை அமைப்பதற்காக இந்த தொகை 9,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

3. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகள் அனைவரும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இவர்களால் இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான அதிகப்படியான செலவினத்தை ஈடுகட்ட இயலாது. தற்போது உயர்ந்துள்ள கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றத்தை கருத்தில் கொண்டு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு மாநில அரசால் வழங்கப்படும் கான்கிரீட் மேற்கூரைச் செலவினத்தை ரூபாய் 9,000லிருந்து ரூபாய் 12,000/– ஆக உயர்த்தி வழங்க ஆணை வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கீட்டையும் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப் பின்னர், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 2006–07 ஆம் ஆண்டிலிருந்து கட்டப்படும் வீடுகளுக்கு வீடு ஒன்றிற்கு கான்கிரீட் கூரை அமைப்பதற்கான மாநில அரசின் மானியத்தை ரூ.9,000/–லிருந்து ரூ.12,000/– ஆக உயர்த்தி ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி –4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள உயர்த்தப்பட்ட மான்யத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(i) "2216 வீட்டு வசதி–03– ஊரக வீட்டு வசதி 789/
ஆதி திராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம் –
பத்தாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II –
மாநிலத்திட்டம் – JB. ஆதி திராவிடர் மற்றும் — ரூ.8.98 கோடி
பழங்குடியினருக்கு கான்கிரீட் வீடு
கட்டும் திட்டம் –09 உதவி மானியங்கள்.
02. மூலதனச் செலவுக்கான மானியங்கள்"
(து.தொ.கு.எண்.2216–03–789–JB–0922).

(ii) "2216 வீட்டு வசதி–03– ஊரக வீட்டு வசதி 800 – ஏனைய செலவு – பத்தாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் –II மாநிலத்திட்டம் – JA. ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வீடுகள் கட்டுவதற்கான திட்டம் –09. உதவி மானியங்கள்" – 02. மூலதனச் செலவுக்கான மானியங்கள்". (து.தொ.கு.எண்.2216–03–800–JA–0928). — ரூ.5.98 கோடி

**மொத்தம்** — **ரூ.14.96 கோடி**

**6.** மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுத்துணைப் பணியாகும். இச்செலவினத்திற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றத்தின் ஒப்புதல் பெறப்படுவதை எதிர் நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (BGI) துறையினால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினத்திற்கான தொகையை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் அரசாணையின் நகலுடன் நிதி (BGI) துறைக்கு விண்ணப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**8.** இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.62517/Finance (R.D.)/06 நாள் 10.10.2006மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.730 (எழுநூற்று முப்பது) இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்